# பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது நாட்டை காட்டிக் கொடுக்கும் செயல் - காமினி பொன்சேகா

பருவவெளியீட்டுப்பகுதி

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 10 இதழ் 42
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23 — 03 — 1992

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானது என்று பிரதிச் சபாநாயகர் திரு. காமினி பொன்சேகா நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகள் குழு யாழ். வர ஏற்பாடு

(கொழும்பு)
ஏழு பௌத்த பிக்குகளைக் கொண்ட சமாதானக் குழு ஒன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன்,

(4ம் பக்கம் பார்க்க)

## கனேடிய விசா மோசடி: இலங்கைப் பொலிசாரிடம் தகவல் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)
கனடாவுக்கு தமிழ் அகதிகளை கடத்திச் செல்லும் குழுவொன்றின் போலிக் கடவுச் சீட்டுகள், விசா மோசடிகள் பற்றி கனேடிய பொலிஸார் இலங்கைபொலிசாரிடமிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ மணலாறு மோதலில் போர் டாங்கியைக் கைவிட்டு இராணுவத்தினர் தப்பி ஓட்டம்

(கொழும்பு)
மணலாறு மாவட்டத்தில், சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், புலிகள் மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதல் சரியாக சிறிலங்காப் படையினரின் டாங்கி ஒன்றின் மீது விழுந்ததால், அதில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானர். ஏனைய இராணுவத்தினர் அந்தப் போர் டாங்கியைக் கைவிட்டுத் தப்பி ஓடினர்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## 8 கொமாண்டோக்கள் மணலாறில் பலி

[கொழும்பு]
மணலாறு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சண்டையில் எட்டு இராணுவ கொமாண்டோப் படையினர் பலியானதாக இராணுவ அதிகாரி ஒரு

[4-ம் பக்கம் பார்க்க]

## 27 படையினரை இராணுவ நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)
ஸ்ரீலங்காவின் முப்படைகளைச் சேர்ந்த 27 படையினர் இராணுவ நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ராணுவம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

களவாடிய பொருட்களை விற்பனை செய்தது, கொலை, கொள்ளை ஊழல்போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ராணுவ ட்டாரங்கள் தெரிவித்தன.

## பொலநறுவ மோதலில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்]
பொலநறுவைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் பல நவீனரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்

[4-ம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
கிளிநொச்சி மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டம், நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணியுடன் நீக்கப்பட்டதாகக் கூட்டுப் படைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணி உ. அ. பிரிவில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுல்படுத்தப்படும் எனவும் கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்தது. (க)

## விமான தாக்குதல்

[முல்லைத்தீவு]
ஒட்டுசுட்டானில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் ஆலயம், பாடசாலை உட்பட வீடுகளும் சேதமடைந்தன.

இருவிமானங்கள் நான்கு குண்டுகளை இப்பகுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் நடவடிக்கை அரசு-புலிகள் சமாதான பேச்சுக்களை பாதிக்காது

(சென்னை)
விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்வதாலோ அல்லது ராஜீவ்காந்தி கொலைவழக்கில் நீதிவிசாரணைக்காக விடுதலைப் புலிகள்இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டுமென இந்தியா வேண்டுகோள் விடுப்பதலோ. இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தை

[4-ம் பக்கம் பார்க்க]

## நாடாளுமன்ற தெரிவுக்குழு ஏப்ரல் 1-ம் திகதி அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்

((கொழும்பு)
இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது அறிக்கையை ஏப்ரல் முதலாம்திகதி அரசிடம் சமர்ப்பிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகள், மற்றும் பொதுமக்களிடமிருந்து இனப்பிரச்னை தீர்விற்கான ஆலோசனைகள் இக்குழுவினுல் பெறப்பட்டிருந்தது.

இனப்பிரச்னை தீர்வ தொடர்

(4-ம் பக்கம் பார்க்க)

## மூதூரில் ஊரடங்கு

(கொழும்பு)
திருமலை மாவட்டத்திலுள்ள மூதூர் உ. அ. அதிபர் பிரிவில் ஊடரங்குச் சட்டம் தொடர்ச்சியாக அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் போட்டியின் போது புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து பறந்த விமானம்

(மெல்போன்)
உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியின் போது ஈழத் தமிழ் இளைஞர்கள் 'விமானம்' ஒன்றில் பறந்து ஈழக்கோரிக்கைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவாக பிரசாரம் செய்துள்ளனர்,

(4-ம் பக்கம் பார்க்க)

## வாய்மூல சாட்சியம் இன்றுடன் முடிவு

(கொழும்பு)
இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்று திங்கட்கிழமையுடன் தனது வாய்மூலம் சாட்சிய பதிவை முடித்துக்கொள்ளவிருக்கிறது.

தென் மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி, முன்னுள் பொத்துவில் எம். பி.

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)
க. பொ. த உயர்தர தாரதரப்பத்திர 1991க்கான பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளைப் பாடசாலை அதிபர்கள் சம்பந்தப்பட்ட கோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(4ம் பக்கம் பார்க்க)

★ 75-வது வருட

# பற்றிக்ஸ் — யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட் வெற்றி தோல்வி இல்லை

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 75வது வருடாந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் சிறப்பாக ஆடி 226 ஓட்டங்களை பெற்றது. அஜன் தேவராசா ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களை எடுத்தார். ரி. வீரசுதன் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 186ஓட்டங்களைபெற்றது. வீரசுதனும், நிகாலும் முறையே 43 ஓட்டங்களைப் பெற்றனர். சென.பற்றிக்ஸ் கல்லூரி 2-வது இனனிங்ஸில்- 21 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 5 விக்கெட்டுகளை இழந்து 42 ஓட்டங்களை மட்டுமே பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. யாழ்ப்பாணக் கல்லூரி 2வது இன்னிங்ஸில் 04 ஓவர்கள் மட்டும் துடுப்பெடுத்தாடி ஒரு விக்கெட் இழப்புக்கு 26 ஓட்டங்களைப் பெற்றது.

**பரிசுபெற்றோர்**

சிறந்த பந்து வீச்சு: ரி வீரசுதன் (யாழ். கல்லூரி) சிறந்த சிறந்த துடுபபாட்டம்: அஜன தேவராசா (சென்.பற்றிக்ஸ்) சிறந்த பந்து தடுப்பு: எஸ். நிசாந்தன் (சென் பற்றிக்ஸ்) சகலதுறை வீரர்: ரி.வீரசுதன் (யாழ்.கல்லூரி) 75 வது வருடப்போட்டி சிறந்த வீரர்: அஜன் தேவராசா (சென்.பற்றிகஸ்).

இப்போட்டிக்கு திரு. பி. முருகவேள், திரு. எஸ். சுசீந்திரலிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம்வகித்தனர். (வி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-04-30ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / விரிவுரையாளர்.

குறிப்பு: உயிரிரசாயனவியலில்/உயிர்தொழினுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணை வேந்தர் ரூபா 4,500 - 10 x 200 - 6,500/- (மாதமொன்றுக்கு)

சம்பள அளவுத்திட்டத்தில் 4,500/-சம்பளப் படியில் வைப்பார்.

விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4500 - 10 x 200 - 6,500/- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின விரிவுரையாளர் முதல் நியமனத்தின்போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4,500 ரூபாவுக்கு மேலே இரண்டு படி அதிகமாக அதாவது 4,900/-ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்)

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட/உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற, 23 x 10ச. மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் /அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-03-21.

(எ-1997)

## "வெற்றி - தோல்வி காண போட்டிகள் அமைய வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''பாடசாலைகளிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகள் வெற்றி-தோல்வி காணும் விதத்தில் வருங்காலத்தில் மாற்றி அமைக்கப்படவேண்டும்.''

சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிகளிடையே நடைபெற்ற 75 வது வருடாந்த கிரிக்கட் போட்டியின் இறுதியில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் சென.பற்றிக்ஸ் கல்லூரியின் உப-அதிபர் வண பிதா பி. ஜேசுநேசன் இவ்வாறு கூறினர்.

75 வருடங்களாக நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டிகள் பெரும்பாலும் வெற்றி-தோல்வியின்றியே முடிவடைகின்றது. இது போன்ற போட்டிகள் தொடங்கி ஒரு மணித்தியாலத்துக்குள்ளேயே அதன் முடிவை முன்கூட்டியே ரசிகர்களால் கணித்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு விளையாட்டில் வெற்றி-தோல்வி நிச்சயம் தெரிந்தே ஆகவேண்டும். அதன் அடிப்படையிலேயே வருங்காலத்தில் போட்டிகள் நடாத்தப்படவேண்டும. அதற்கு ஏற்றவாறு போட்டி அமைப்பாளர்கள் போட்டி நடைபெறும் நேரங்களை கூடடிக் குறைகக வேண்டும் என்று வண. பிதா ஜேசுநேசன் மேலும் கூறினர்.

மேற்படி பரிசளிப்பு வைபவத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் வண. கலாநிதி ஜெபநேசனும், சென், பற்றிக்ஸ் கல்லூரி உப அதிபரின் கூற்றை ஆமோதித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது. (வி)

## 31ம் நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கணபதி கந்தசாமி (சாமியார்)**

**அன்னை மடியில்:** 25 08 1936

**ஆண்டவன் அடியில்:** 22-02-1992

அணைந்த ஓர் அன்புத்தீபம் - என்றும்
அணையாத எங்கள் பாசதீபம்
மறைந்தது எங்கள் ஒளிவிளக்கு - என்றும்
மங்காத எங்கள் குலவிளக்கு

இன்று (23-3-1992) எமது இல்லத்தில் நடைபெறும் அன்னரது அந்தியேட்டிக்கிரியைகளில் பங்குபற்றி ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம்.

● தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.

குடும்பத்தினர்

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(சி-6084)

கிரிக்கெட்

## செயலக அணி வெற்றி

(மானிப்பாய்)

யாழ். செயலக விளையாட்டு அணிக்கும் யாழ். தபாற் திணைக்கள விளையாட்டு அணிக்குமிடையில் 20 ஓவர் மென்பந்து கிரிககற் போட்டியொன்று பெற்றது.

அரியாலை ச. ச. நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ். செயலக அணி 22 ஓட்டங்களால் வெற்றியீட்டிக்கொண்டது.

## மானிப்பாயில் மின்னொளி

(மானிப்பாய்)

பகுதி பாடசாலை மாணவர்கள் இரவில் கல்வி பயில்வதற்கு வசதியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு ஜெனரேற்றரொன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மாணவாகள் மாலை 6 மணி வரை மின்னொளியிலிருந்து தினமும் கல்வி பயின்று வருவதை காண முடிகிறது. (71)

உதைபந்தாட்ட

## நடுவர் பயிற்சி வகுப்புகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதி உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் உதைபந்தாடட நடுவர் பயிற்சி வகுப்புக்களையும் பரீட்சையையும் நடத்தவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களிலும் பரீட்சையிலும் பங்குபற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக திரு. தி. வரதராசன் செயலாளர், பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் வதிரி அல்வாய் என்ற முகவரிக்கு விண்ணடபிக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## மக்கள் அஞ்சலி

[சித்தன்கேணி]

சங்கானை, சித்தன்கேணி ஆகிய இடங்களில் அன்னை பூபதியன உருவப்படம் அலங்கரிககப்பட்ட பந்தல்கள் அமைத்து வைக்கப்பட்டுள்ளன.

அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள அன்னை பூபதியின் உருவப் படத்துக்கு மலர்மாலைகள் வைத்து மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். (137)

## குமண கப்பல் இன்றுவரும்

(புலோலி)

அத்தியாவசிய பொருட்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்துபுறப்பட்டுள்ள யேர்ஸ் குயண என்ற கப்பல் இன்று 23ம் திகதி திங்கடகிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். (61)

## சாரணர் ஆசிரியர் கைநூல்

(புலோலி)

புலோலி மேற்கு வியாபாரி மூலை விநாயகர் தருமநிதியத்தினல் சாரணர் ஆசிரியர் கைநூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்நூலை வடமராட்சி கிழககு சாரணர் சங்கத் தலைவர் திரு. பா. இரகுநாதன் எழுதியுள்ளார். (61)

## இன்று

(உடுவில்)

நவாலி கொத்தணி பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நவாலி அட்டகிரி சைவத் தமிழ்வித்தியாசாலை சுபாஸ் விளையாடடு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு. ஐ. மனோகரன் தலைமையில் இன்று 23ம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். (109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ், உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றையஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் கொக்குவில் பொற்பதி ஐக்கிய கழகமும் மோதுகின்றன.

மேற்படிப் போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## இராசிபலன்

**23/03/1992**

**திங்கட்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 10)**

பஞ்சமி மு. இ. 8-31வரை, விசாகம் மு. ப. 8-51 வரை, மரணயோகம், இராகுகாலம் காலை 7-46 முதல் 9-16வரை, சுபநேரம் பகல் 12-16 முதல் 1-46 வரை.

மேடம்: உறவினர் பகை, வீண்செலவு, அலைச்சல்.

இடபம்: கடின நெஞ்சம், ஆராய்ச்சி, பணவரவு.

மிதுனம்: சமாதானமுயற்சி, பெண் உதவி, புகழ்.

கடகம்: காரிய தடை, அவமானம், துன்பம்.

சிங்கம்: ஆணவப் போக்கு, தொழில்முடை, நஸ்டம்.

கன்னி: எதிரிகளால் பாராட்டு, செல்வாக்கு, தானதர்மம்.

துலாம்: நம்பிக்கைகுறைவு, வீண்வாதம், கடன்சுமை.

விருச்சிகம்: குடும்பமகிழ்ச்சி, கடும் உழைப்பு, பொதுப் பணி.

தனுசு: பிதா வெறுப்பு, சொற்களில் கடுமை, குடும்ப கஸ்டம்.


மகரம்: மகிழ்ச்சியான நிகழ்வு, சகோதர வரவு, பயணம்.

கும்பம்: தொழில்லாபம், தற்பெருமை, தெய்வ தரிசனம்.

மீனம்: கடும்வாதம், பண முடை, வாக்குப் பகை.

- ஜோன்யர்

## காணவில்லை



மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியைச் சேர்ந்த நடேசபிள்ளை நிசந்தன் என்பவரை 27-02-92 வியாழன் மாலை 4-30 மணியிலிருந்து சாணவில்லை. நிறம் சிவப்பு. உயரம் 4 அடி இருக்கும் இவரைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். விநாசித்தம்பி நடேசபிள்ளை, சிவன் கோவிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி தகவல் கொடுபோருக்கு இயன்ற சன்மானம் கொடுக்கப்படும்.

(சி 6083)

# "எதிர்காலத்தவர் அறியும் வகையில் போராட்டவரலாறை படைக்க வேண்டும்"

(வட்டுக்கோட்டை)

''ஒவ்வொருவனும் தான் வாழும் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை எதிர்காலத்தவர்களும் வாசித்து அறியக்கூடியதாக கலைப்படைப்புகளை உருவாக்கவேண்டும். கலைஞரால் எழுத்தாளனால், கவிஞனல் உருவாக்கப்படும் கலைப் படைப்புகள் போர்க்கால சம்பவங்களை, வீரதீரச் செயல்களை தியாகங்களை எதிர்காலத்தவர்கள் அறிந்துகொள்ளக் கூடிய வரலாறுப் படைப்புக்களாக அமையவேண்டும்.''

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் வலிகாமம் பிரிவுக் கலைஞர்கள். எழுத்தாளர்கள். கவிஞர்களுக்காக நடத்தப்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கலை, பண்பாட்டுக் கழகத் தலைவர் புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: ''தனிமனிதன் ஒருவன் இருக்கும்போது வாழ்வான். செத்தபின் மறைவான.

''ஆனல் கலைஞனே இருக்கும்போது சாவான்' செத்தபின் வாழ்வான். எனவே இறந்த பின்பும் வாழ்ந்து கொண்டிருக்கிற பாக்கியம் கலைஞன். கவிஞன், கதாசிரியனுக்கே உண்டு.

இத்தகைய சிறப்புவாய்ந்தவர்கள் இன்றே படைப்புகளை ஆக்குங்கள். முன்னைய கலைஞர்களைவிட இன்றைய கலைஞர்களுக்குத் தான் வாய்ப்பும் பொறுப்புகளும் உண்டு.

இன்று நடைபெறும் போராட்டத்தை, இராணுவத்தினரின் அட்டூழியங்களை படம் பிடித்துக் காட்டுவது போல வரலாறு படைக்காத கலைஞர்கள், கவிஞர்கள், கதாசிரியர்களால் என்ன பயனுண்டு?

ஆக்க இலக்கியங்களை உருவாக்கப்போகும் கலைஞர்களுக்குப் போராட்ட வரலாறு தெரியவேண்டும். எதிர்கால மக்கள் போராட்ட வரலாற்றைப் பற்றி அறியக்கூடிய வகையில் இலக்கியங்கள் அமையவேண்டும்.

தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த திரு. யோகேந்திரன, மாவட்டப் பொறுப்பாளர் திரு. தங்கத்துரை, கலை பண்பாட்டுக் கழக வலிகாமம் பொறுப்பாளர் திரு. பொழிலன் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். (139)

---

ரஞ்சன் கொலை

## விசேட கமிஷன் அமைக்க கோரிக்கை

[கொழும்பு]

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொலை தொடர்பான விசாரணை செய்வதற்கு விசேட கமிஷனை நியமிக்குமாறு எதிர்க் கட்சிகள் அரசைக் கேட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்பு பற்றிய இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கையில் வெளிவந்த சந்தேகங்களையடுத்து இதனை விசாரிப்பதற்கு விசாரணைக் கமிஷனை நியமிக்குமாறு ஐக்கிய சோசலிஸ முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன அரசைகேட்டுள்ளன. (மா)

---

## கொழும்புத்துறையில் தும்புத் தொழிற்சாலை உற்பத்தி ஆரம்பம்

(கொழும்புத்துறை)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினுடைய, உணவு உற்பத்திக் குழுவினுடைய கொழும்புத்துறை கிழக்கில் தும்புத் தொழிற்சாலை உற்பத்திச் சங்கம் ஒன்று உணவு உற்பத்திக் குழுத்தலைவி திருமதி வே. தேசிங்கராசா தலைமையில் யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையில் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டது.

இச்சங்கத்தினூடாக தும்பு பதனிடுதல், கயிறு திரித்தல், தும்புத்தடி கட்டுதல், கால்மிதி தயாரித்தல் போன்ற பல வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (154)

---

## வடபகுதிக்கு தொடர்ந்து சிங்களக் கடிதங்கள்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச திணைக்களங்களுக்குத் தனிச்சிங்களத்திலேயே சுற்றறிக்கை, சுற்றுநிருபங்கள் கடிதங்கள் கொழும்புத் தலைமைச் செயலகத்திலிருந்து தொடர்ந்தும் அனுப்பிவைக்கப்பட்டு வருவதாகத் திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவிக்கிறனர்.

பொதுநிர்வாக அமைச்சு, உள்நாட்டு இறைவரித்திணைக்களம், மதுவரி இலாகா, ஓய்வூதியத்திணைக்களம், சுகாதாரத்திணைக்களம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிலிருந்து தனிச்சிங்களத்திலேயே கடிதங்கள் கிடைத்து வருகின்றன. (154)

---

10 வருடமாகியும்

## ஓய்வூதியம் கிடைக்கவில்லை

(ஊர்காவற்றுறை)

புகையிரத சேவையிலிருந்து இளைப்பாறி பத்துவருடங்களாகியும் ஒருவருக்கு புகையிரதப் பகுதி இன்னமும் ஓய்வூதியம் வழங்கவில்லை.

யாழ். புகையிரத வீதியைச் சேர்ந்த திரு எஸ். சச்சிதானந்தம் என்பவருக்கே இன்னும் ஓய்வூதியம்கிடைக்கவில்லை.

---

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு தற்போது உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். செயலகத்தின் பணிப் பின்பேரில் இந்நிவாரணம் வழங்கப்படுகிறது (61)

---

## "இடைப்போக செய்கை விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு நடவடிக்கை

(உடுவில்)

பெரும்போகச் செய்கையைத் தொடர்ந்து இடைப்போகச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகளுக்கு உடுவில் கமநல சேவை நிலையத்தால் பல ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

உடுவில் கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கிராம சேவையாளர் பிரிவுகள்தோறும் விவசாயிகளுக்கு தேவையான இடைப் போகச் செய்கைக்குரிய பயறு, குரக்கன், சணல், கௌபி விதைகளை வழங்க தாம் நடவடிக்கை எடுத்திருப்பதாக உடுவில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு.க. மகாதேவராசா தெரிவித்துள்ளார்.

உடுவில்கமநலசேவைபிரிவுக் குட்பட்ட விவசாயிகள் தமக்கு வேண்டிய விதை தானியங்களைப் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட விவசாயசேவை நிலையங்கள், உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (109)

---

## சோளத்தை பயிர் செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அடுத்த பெரும்போகத்தில் இருந்து, சோளத்தை ஊடு பயிராக வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இதற்கு வேண்டிய நல்லினச் சோளம் விதைகளை, விவசாயத் திணைக்களம் மகாஇலுப் பள்ளமவில் இருந்து பெற்றுத் தருவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளவிருக்கிறது. (மா)

---

## 'கோட்டமட்டத்தில் முப்பது பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்'

(உடுவில்)

''பாடசாலைகளின் வளர்ச்சி கருதி கல்வித்திணைக்களம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஒவ்வொரு கோட்டத்திலும் உள்ள ஒவ்வொரு பிரிவு பாடசாலைகளிலும் ஒவ்வொன்ருக ஐவைந்து பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு மொத்தம் 30 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.''

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இணுவில் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

அதிபர் திரு. சு.தம்பித்துரை தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. திரு. இ. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது: கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட உள்ள பாடசாலைகள் கல்விப்பணிப்பாளரின் நேரடிக் கவனத்தின்கீழ் கண்காணிக்கப்படும். பல பிள்ளைகள் உயர்கல்விக்காக நகர பாடசாலைகளுக்கு படையெடுக்கின்றனர். நகர பாடசாலைகளுக்கு செல்லும் கிராமப்புறப் பிள்ளைகள் அங்கு 2ம்தர பிள்ளைகளாகவே ஏனைய மாணவர்களால் கணிக்கப்படுகின்றனர்.

கிராமப்புறப்பாடசாலைகளை நகரப்புற பாடசாலைகளின் தரத்துக்கு உயர்த்தும் எமது நடவடிக்கை பூர்த்தியடையும் போது பிள்ளைகள் நகரப்புறப் பாடசாலைகளை நாடும் மனப்பாங்கை விட்டுவிடுவர்.

திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசுகளை வழங்கினுர். பாரதி இல்லம் 395 புள்ளிகளையும், கம்பர் இல்லம் 377 புள்ளிகளையும் ,வள்ளுவர் 359 புள்ளிகளையும் பெற்றன. 109)

---

### தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்:

## கலாச்சார போட்டிகளை நடாத்த ஏற்பாடு

(சித்தன்கேணி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அகில இலங்கை ரீதியில் கலாச்சாரப் போட்டியை நடாத்தவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மகரகமவிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மேற்கொண்டுள்ளது.

முதலில்குறிப்பிட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து இளைஞர் கழகங்களின் பங்களிப்புடன் மாவட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டு மாவட்டப் போட்டிகளிலே முதலாம் இடங்களைப் பெறுபவர்கள் மாத்திரம் கொழும்பில் நடைபெறவுள்ள அகில இலங்கைப் போட்டியில் கலந்து கொள்ள அழைக்கப்படவுள்ளனர்.

நடனம், கிராமிய நடனம், பரதநாட்டியம், கிராமிய நடனம, புதிய பாடல், கர்நாடக சங்கீதம், தனிநபர்நடிப்பு, வயலின், மிருதங்கம், வீணை, அறிவிப்பாளர், கவிதை, சிறு கதை, கட்டுரை, நாடகம் ஆகியதுறைகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றவுள்ள இளைஞர் கழகங்கள் இந்தமாதம் முடிவடைவதற்குள் விண்ணப்பங்களை மாவட்டத்திலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல இளைஞர் சேவைகள் மன்றங்களிற்கும் மகரகமவிலுள்ள தலைமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [137[

---

## நாய்களுக்குத் தடுப்பூசி போடுமாறு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் நாய்களை வளர்ப்பவர்கள் நாய்களுக்குத் தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளுமாறு யாழ் பொது மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவினர் பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.

அவ்வறிவுரைகள் வருமாறு:

* உங்கள் ஊரிலுள்ள சுற்றுடலில் வித்தியாசமான விதத்தில் நாய்கள் நடமாடினுல் அதன்போக்கை அவதானித்து உடனே அயலிலுள்ள சுகாதாரப் பகுதிப் பரிசோதகர்கட்கு அறிவித்து விசர்நாய் எனக் கருதப்பட்டு அழிப்பதற்குநடவடிக்கை எடுங்கள்.

* நாய் கடித்தால் நாயைக் கட்டிவைத்துப் பத்து நாட்கள் வரை உயிருடன் இருக்கிறதா என்று பார்க்கவும், கட்டி வைக்கப்பட்ட நாய் அப்படி இறந்தால் அது விசர்நாயாகக் கருதப்படும். உடன்வைத்தியசாலை சென்று விசர்நாய் தடுப்பூசி மருந்தினைப் போட்டுக்கொள்ளவும்.

* வீதிகள், ஒழுங்கைகளில் வளர்ப்பு நாய்களை நடமாட விடாது நாய்க்கு உரியவர்கள் அதனை வீட்டு வளவுக்குள் கட்டிவைத்து வளர்க்கவும்.

* வீதிகள், ஒழுங்கைகள் தோறும் கட்டாக்காலி நாய்கள் பாதசாரிகளையும், சைக்கிளில் செல்வோரையும், பாடசாலை மாணவர்களையும் தினமும் கடித்து வருகின்றன.

* நாயிடம் கடிவாங்குகிறவர்கள் ஏற்பூசி, விசர்நாய்த்தடுப்பூசி ஆகிய மருந்துகளை ஏற்றிக்கொள்ள அதிக கவனம் செலுத்தப்படல்வேண்டும். (66)

---

## கச்சேரி வேலைகள் பரவலாக்கபடும்

(கொழும்பு)

கொழும்பிலும் மாகாண சபைகளிலும் கச்சேரிகளிலும் நடைபெற்ற வேலைகள் நாட்டிலுள்ள 232 பிராந்திய செயலகங்களுக்கு இவ்வருடத்திற்குள்பரவலாக்கப்படவிருக்கிறது.

232 பிராந்திய அரசாங்க அதிபர்களை தெரிவுசெய்யும் பணியில் பொது நிர்வாக அமைச்சு தற்போது ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. (மா)

---

## விசேட ஆணையாளர்

(சித்தன்கேணி)

வலிகாமம மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளராக வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் செல்வி ரூபினி கனகரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## விசர்நாய் கடித்து இருவர் மரணம்

(கொழும்புத்துறை)

வலி. கிழக்கிலுள்ள புத்தூர் பகுதியில் விசர்நாய் கடித்து இருவர் பலியானுர்கள்.

இதேவேளை அச்சுவேலியில் ஒரு விசர்நாய் 8 பேருக்கு கடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்பொழுது விசர்நாய்க்கடி தடுப்புமருந்து ஏற்றப்பட்டு வருகிறது. (154)

---

## இறுதித் திகதி

(மானிப்பாய்)

வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி இம்மாதம் 31-ந் திகதியாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது,

இந்த் திகதிக்குப் பின்னர் இதனைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு தண்டம் அறவிடப்படுமென வடக்கு-கிழக்கு மாகாண சபையின் போக்கு வரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. [71[

---

## தவக்கால நற்சிந்தனை

நாம் மனிதர்கள் மீது அல்ல, ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கவேண்டு . ஏனெனில் அவர் மனிதரைப்போல் ஏமாற்றுபவர் அல்ல மாருக நிறைந்த அன்பும், இரக்கமும் கொண்டவர். அவர் வாக்குறுதியில் நம்பிக்கை வைக்கவேண்டும் ஏனெனில் அவர் வாக்குத் தவருதவர்.

வாழ்வுதரும் வார்த்தை அவரிடமே உண்டு.

- மோ. தார்சீசியஸ்

## இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதையே எல்லோரும் விரும்புகின்றனர்

### அமைச்சர் செல்லச்சாமி

(சென்னை)

இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், பொது மக்களும் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதையே விரும்புகின்றனர் என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்னை வந்த திரு. செல்லச்சாமி, கோவையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு தெரிவிக்கையில் கூறியதாவது: ''இந்தியாவில் தற்போது சுமார் இரண்டு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர். இவர்கள் இலங்கை திரும்பும்போது, இலங்கை அரசு மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

''இலங்கையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கென அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளிடமும், சகல அமைப்புக்களிடமும், பல்வேறு தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டு அறிந்து வருகிறது.'' (கே)

## குண்டுவைப்பு நிபுணர்கள் கொழும்பில் நுழைவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கார்க் குண்டு வைப்பதில் நிபுணர்களான மூவர் கொழும்புக்குள் நுழைந்துள்ளதாகக் கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்ததாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் சேர்ந்த இந்த மூவரும் மாறு வேடத்தில் கொழும்புக்குள் நுழைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

கைவிடப்பட்ட நிலையிலுள்ள வாகனங்கள், பார்சல்கள் பற்றி மக்கள் அவதானமாக இருக்குமாறும் கூட்டுப் படைத் தளபதி கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## திருமலையில் சிறியபகுதியே ராணுவ கட்டுப்பாட்டில்

(லண்டன்)

திருகோணமலையில் நான்கு மைல் சுற்றளவுள்ள பகுதியே ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பி.பி.ஸி. கொழும்பு முகவர் கிறிஸ் மொறிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'கொழும்புக் கடிதம்' என்ற தலைப்பில் அவர் பி. பி. ஸிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொலிஸார் உள்ள பகுதியில் 100 மீற்றர் இடைவெளிக்குள் காவலரண்கள் காணப்படுகின்றன.

நகரில் மக்களின் சாதாரண வாழ்க்கை எந்த அளவுக்கு எட்டத்தில் உள்ளதென்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன் வான் ஒன்றில் பயணம் செய்த ஏழு பேர் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானதாக நிலாவெளியில் அமைந்துள்ள தமிழ் அகதிகள் முகாமிலுள்ள அகதிகள் தெரிவித்தனர்.

அடுத்த சம்பவம் எந்த நேரத்தில் இடம் பெறுமோ என்பதை எங்களால் நினைத்துப்பார்க்க முடியாமலிருக்கிறது என்று சிங்கள வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

### உலகக் கிண்ண கிரிக்கெட்:

## மழை இங்கிலாந்தின் வெற்றிக்கு வழிவகுத்தது

(மெல்போன்)

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆட இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது. நேற்று நடைபெற்ற அரைஇறுதியாட்டத்தில் தெ. ஆபிரிக்காவை 20 ஓட்டங்களால் வென்றதன் மூலம் இத்தகுதியை இங்கிலாந்து பெற்றது.

முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 25 ஓவரில் 6விக்கெட்டுகளை இழந்து 252 ஓட்டங்களை பெற்றது. கிறகாம் ஹிக்-81)

தெ. ஆபிரிக்க அணி 42 5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களைபெற்ற போதுஆட்டத்தை மழைக்குழப்பியது. அப்போது 13 பந்துகளில் 22 ஓட்டங்களை பெற வேண்டியிருந்தது பின் 9பந்துகளில் 22 ஓட்டங்களை பெற வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. மீண்டும் மழையில் ஆட்டம் தடைப்பட 1 பந்தில் 22 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் 2 ஓட்டங்களையே தெ. ஆபிரிக்கா பெற்றது. (சி)

## ஆடம்பர ஹோட்டலில் காமினியின் பிறந்தநாள்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களில் ஒருவருமான காமினி திசநாயக்கா தமது 50 வது பிறந்த தினத்தை கடந்த வெள்ளிக்கிழமை நாட்டின் முதலாவது 5 நட்சத்திர ஹோட்டலான ஹோட்டல் ஒபரேயில் கொண்டாடினார்.

இந்த பிறந்த தினவிழாவில் 900 இராஜதந்திரிகள் பங்கு பற்றினார்கள். பிரதம அதிதியாக இந்திய முன்னாள் அமைச்சர் நட்வர்சிங் அழைக்கப்பட்டிருந்தார். (மா)

## உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் வலிகாமம் மேற்கு பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இன்றைய போட்டியில் வட்டுக்கோட்டை அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதுகின்றது. வலைபந்தாட்டத்தில் வைக்கிங்ஸ் அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் 'ஏ' அணி மோதுகின்றது. [சி]

## வீரச் சாவு

(யாழ்ப்பாணம்)

மணலாறு பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நேரடி மோதலில், 2ம் லெப். அறத்திருவனும் (சின்னத்தம்பி ஜனபதிப்பிள்ளை தம்பிலுவில்) இதேஇடத்தில் விழுப்புண் அடைந்த கப்டன் பரஞ்சோதி (வெபாதசுந்தரம் அருள்சீலன் திரியாய்) வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

### 8 கொமாண்டோக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் தெரிவித்தார்.

இந்தஎட்டுப்பேருடன் அன்றையதினம் சாதாரண இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கனரக வாகனங்கள் சகிதம் விமானத் தாக்குதல்களின் மத்தியில் இப்படையினர் முன்னேற முயன்றபோது புலிகள் உக்கிரமான தாக்குதலை நடாத்தினார்கள். இதனாலே இந்த ஒன்பது பேரும் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### நாடாளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பான திட்டங்கள், ஆலோசனைகள் யாவற்றையும் ஆராய்ந்துவரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் ஏப்ரல் முதலாம் திகதி இது தொடர்பான தமது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

### வாய்மூல

(1-ம பக்கத் தொடர்ச்சி)

ஜலால்தீன் ஆகிய இருவரும் இன்று தனித்தனியாக தெரிவுக்குழுமுன் வாய்மூலம் சாட்சியம் அளிக்கவிருக்கிறார்கள்.

இச்சாட்சியங்களை அடுத்து மூன்று வாரங்களுக்குள் தெரிவுக்குழு தனது அறிக்கையை தயாரித்து முடிக்குமென்றும் கூறப்படுகிறது. (மா)

### பௌத்த

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதித் தலைவர் மாத்தயா உட்பட இயக்கப் பிரமுகர் பலரைச் சந்தித்து இவர்கள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவிருப்பதாக கொழும்புப்பத்திரிகையொன்று தெரிவித்திருக்கிறது.

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுவதைபாதிக்கப்படமாட்டாது என இந்தியா வந்துள்ள இலங்கை தொழில்துறை ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் இது தடையாக அமையாதெனவும் அவர் குறிப்பிட்டார். (கே)

### விமானதாக்குதல்

(1-ம் பக்கத தொடர்ச்சி)

வீசியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விமானங்கள் 14-ம் கட்டையில் நடததிய குண்டுத் தாக்குதலில் கோ, அழகையா என்பவரின் வீடு முற்றாகச் சேதமடைந்தது. [56]

### கனேடிய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தகவல்களை கோரியுள்ளார்கள்.

கடந்தவாரம் இந்தமோசடியில் ஈடுபட்டிருந்த இலங்கை வாலிபர்கள் இருவரை கனேடியப் பொலிசார் கைதுசெய்திருந்தனர். ஆறுமாதங்களுக்கு முன்பே இந்த மோசடி பற்றிய விபரம் கனேடிய பொலிஸாருக்கு கிடைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

### மணலாறு மோதலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணலாறுப் பகுதியில் டலிகளுக்கு எதிரான போரில், அரசுப்படை சீனாவிலிருந்து வாங்கிய நவீன போர் டாங்கிகளை பயன்படுத்தினாலும், போர் டாங்கிகளை மட்டுமே எதிர்கொள்ளும் வகையில் புலிகள் நன்கு பயிற்சிபெற்ற தனிப்பிரிவு ஒன்றை அமைத்திருப்பதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 'சிறப்பு புலிப் படை' கடந்த வாரம் முல்லைத்தீவில் ஏற்பட்ட மோதலின்போது பயன்படுத்திய 'ரொக்கட்', சரியாக போர் டாங்கியினுள் விழுந்ததென்றும், அதனால் ஒரு இராணுவசிப்பாய் பலியானதாகவும், இரு இராணுவத்தினரின் செவிப்பறைகள் சேதமடைந்ததோடு, இந்த டாங்கியில் அமர்ந்திருந்த அனைத்து இராணுவத்தினரும் டாங்கிகளைக் கைவிட்டு பின் வாங்கி ஓடியதாகவும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளையில் கடந்த வாரம் போர்டங்கிகளையே எதிர்த்து அழிக்க வல்ல சிறப்பு துப்பாக்கியை புலிகள் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றியுள்ளதனால், அத்துப்பாக்கிப் பயனடுத்திப் புலிகள் இராணுவத்தினரின் தாங்கிகளை செயலிழக்கச்செய்கின்றனர் என்றும் இத்துப்பாக்கி புலிகளின் கண்ணிவெடிகளிலும் பார்க்க அதி சக்தி வாய்ந்தது என்றும் மற்றும் ஒரு பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. [கே]

### மொலநறுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் விபரம்:

40 மி.மீற்றர் துப்பாக்கி-1, இதற்குரிய எறிகணைகள் 13, ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கி 1, ரவைக கூடுகள்-3, லிங் - 450, ரி 56 ஒன்று ரக துப்பாக்கிகள் -2, ரி 56 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள்-12, நடுத்தர ரவைகள் 1,000, தொப்பிகள் 4, ரி 81 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள் 6, சாப்பாத்து 6 சோடி உட்பட மேலும் பல இராணுவ தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம்மோதல்களின்போது மேஜர் ஈஸ்வரன் [சுந்தசாமி லிங்கேஸ்வரன் சந்திவெளி], அலன் [கணபதிப்பிள்ளை ராமச்சந்திரன் மொறகொட்டாஞ்சேனை], இராமமூர்த்தி [செல்லத்தம்பி ரபேஸ்வரன் மாங்கேணி] ஆகியோர் புலிகள் தரபபில் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### கிரிக்கெட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: இங்கிலாந்துக்கும் இலங்கை அணிக்குமிடையில் ஆஸ்திரேலியாவில் 'பலாறட்' நகரில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது திடீரென வந்த விமானமொன்று பல பதாகைகளைத் தாங்கிய வண்ணம் மைதானத்தைச் சுற்றிச்சுற்றிப் பறக்க ஆரம்பித்தது,

அப்பதாகைகளில் 'ஈழத்தில் இருந்து இலங்கையர்களே வெளியேறுங்கள்' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததுடன், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும் பல சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இச்சம்பவம், போட்டியில் கலந்துகொண்ட ஆட்டக்காரர்கள் உட்பட, அங்கு குழுமி இருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களின் கவனத்தையும் பெரிதும் ஈர்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில்சேர்க்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் கல்விக் கோட்டங்களிலும், பெற்றுக்கொள்ளலாம் என்று கல்வித்திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (சு)

### மூதூர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணி முதல் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு நீக்கப்பட்டு பின்னர் மாலை 5-00மணிமுதல் தொடர்ச்சியாக காலவரையறையின்றி அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

### பிரபாகரனை

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

புப் பிரேரணை மீது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:

''பிரபாகரன் இந்நாட்டவர் அவர் குற்றம் இழைத்திருந்தால் அவரைத் தண்டிக்க இந்நாட்டில் சட்டம் உள்ளது பிரபாகரன் போன்றோருடன் யுத்தம்புரிய எம்நாட்டில் இராணுவ, கடற்படை, விமானப் படையினரும் உள்ளனர். இத்தகைய யுத்தத்தில் ஏற்கனவே படையினர் ஈடுபட்டுள்ளனர்.

எமதுநாட்டில் ஒரு சட்ட முறை உள்ளது. இங்குள்ளவர்களை விசாரித்து தண்டிக்க இச்சட்டமுறைபோதுமானது.

இந்நிலையில் அயல்நாட்டுச் சட்டப்படி எம்நாட்டவரைத் தண்டிக்க ஒப்படைப்பது சரியா? பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது காட்டிக்கொடுக்கும் செயல் போன்றது. இப்படிச் செய்வது எமது நீதி முறையை, நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகும். [ரி]

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மெய்வல்லுநர் போட்டி நாளை 24ம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (சு)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81.